30-10-2022 காலை முரளி ஓம் சாந்தி ''அவ்யக்த பாப்தாதா'' ரிவைஸ் 21.11.92

கர்மங்களின் ஆழமான நிலையை அறிந்தவர் ஆகுங்கள்

இன்று அனைத்து பொக்கிஷங்களை கொடுக்கக்கூடிய தந்தை, அனைத்து குழந்தைகளின் சேமிப்புக் கணக்கை பார்த்துக் கொண்டு இருந்தார். பொக்கிஷங்களோ அனைத்து குழந்தை களுக்கும் அளவிட முடியாதளவு கிடைத்துள்ளன, மேலும், அனைவருக்கும் ஒன்று போல், ஒருவர் மூலம் அனைத்து பொக்கிஷங்களும் கிடைத்துள்ளன. ஒரு பொக்கிஷம் அல்ல ஆனால், அனேக பொக்கிஷங்கள் கிடைத்துள்ளன. ஆனாலும் கூட ஒவ்வொருவருடைய சேமிப்பு கணக்கு வெவ்வேறாக உள்ளது. சிலர் அனைத்து பொக்கிஷங்களையும் நல்ல முறையில் சேமித்திருக்கின்றனர், மற்றும் சிலர் அவர்களுடைய சக்திக்கேற்ப சேமித்திருக் கின்றனர். மேலும், எந்தளவு சேமிப்பு செய்திருக்கின்றார்களோ, அந்தளவே நடத்தை மற்றும் முகத்தில் அந்த ஆன்மிக போதை தென்படுகிறது, சேமிப்பு செய்ததன் ஆன்மிகப் பெருமிதம் அனுபவம் ஆகிறது. எந்தளவு பெருமிதம் உள்ளதோ, அந்தளவு கவலையற்ற சக்கரவர்த்தி யினுடைய ஜொலிப்பானது அவர்களுடைய ஒவ்வொரு கர்மத்தில் தென்படுகிறது, இதுவே ஆன்மிகப் பெருமிதத்தின் முதல் அடையாளம் ஆகும். ஏனெனில், எங்கு ஆன்மிகப் பெருமிதம் உள்ளதோ, அங்கு எந்தக் கவலையும் இருக்க முடியாது. எவ்வாறு ஒளி மற்றும் இருள் இணைந்து இருக்க முடியாதோ, அதுபோல் பெருமிதம் மற்றும் கவலை ஆகிய இரண்டும் ஒரே நேரத்தில், ஒன்றாக இணைந்து இருக்க முடியாது.

கவலையற்ற சக்கரவர்த்தியின் விசேஷத்தன்மை என்னவென்றால் அவர்கள் சதா கேள்விகள் நிறைந்த உள்ளத்திற்கு பதிலாக மகிழ்ச்சி நிறைந்த உள்ளம் உடையவர்களாக இருப்பார்கள். ஒவ்வொரு கர்மத்தில் சுயத்துடன் கூடிய சம்பந்தத்தில் மற்றும் அனைவருடன் உள்ள சம்பந்தத்தில் மற்றும் இயற்கையினுடன் உள்ள சம்பந்தத்தில் எப்படிப்பட்ட நேரத்திலும், எப்படிப்பட்ட விசயத்திலும் எண்ணத்தளவில் கூட இது இவ்வாறு ஏன்? அல்லது இது என்ன நடந்து கொண்டிருக்கிறது?, இப்படியும் நடக்குமா என்ன? என்ற கேள்விக்குறி வராது. மகிழ்ச்சி யான உள்ளமுடைய ஆத்மாவின் எண்ணத்தில் ஒவ்வொரு கர்மத்தை செய்யும்பொழுதும், பார்க்கும்பொழுதும், கேட்கும்பொழுதும், சிந்திக்கும்பொழுதும், என்ன நடந்துகொண்டு இருக்கிறதோ, அது எனக்கு நல்லது தான் நடக்கிறது மற்றும் சதா நல்லதே நடக்கும் என்பதுவே இருக்கும். கேள்வி நிறைந்த உள்ளமுடைய ஆத்மா என்ன, ஏன், இப்படி, அப்படி என்ற இந்தக் குழப்பத்தில் தன்னை கவலையற்ற நிலையில் இருந்து கவலை நிறைந்த நிலைக்கு கொண்டு வந்து விடுவார்கள். கவலையற்ற ஆத்மா தீயதைக் கூட நல்லதாக மாற்றிவிடுவார்கள், ஆகையினால், அவர்கள் சதா மகிழ்ச்சியாக இருப்பார்கள்.

தற்காலத்தில் அறிவியல் சாதனத்தின் மூலம் கூட வீணான, கெட்டுப்போன பொருள் என்ன உள்ளதோ, அதை மாற்றி நல்ல பொருளாக ஆக்கிவிடுகின்றனர். மகிழ்ச்சியான உள்ளமுடைய ஆத்மா அமைதி சக்தி மூலம் தீய

விசயமானாலும், சம்பந்தம் தீயதாக அனுபவம் ஆனாலும், அந்தத் தீயதை நல்லதாக மாற்றி தனக்குள்ளும் தாரணை செய்வார்கள் மற்றும் தன்னுடைய சுபபாவனையின் சிரேஷ்டமான சங்கல்பத்தால் தீயதை மாற்றி நல்லதை தாரணை செய்வதற்கான சக்தியை பிறருக்கும் கொடுப்பார்கள். எப்பொழுது விசயமே தீயதாக அல்லது தவறானதாக உள்ளதோ, அப்பொழுது தவறை தவறு என்று சொல்லத்தான் வேண்டும் அல்லவா அல்லது தவறை தவறு என்று புரிந்துகொள்ளத் தான் வேண்டுமல்லவா என்று சில குழந்தைகள் நினைக்கின்றனர் மற்றும் சொல்கின்றனர். ஆனால், தவறை தவறு என்று புரிந்துகொள்வது என்பது புரிந்துகொள்ளும் கணக்கின்படி புரிந்துகொண்டீர்கள். இப்படி சரி மற்றும் தவறு என்று புரிந்துகொள்வது, அறிந்துகொள்வது என்பது வேறு. ஆனால், ஞானத்தின் ஆதாரத்தில் அறிந்து கொண்டவர்கள், புரிந்து கொண்ட பிறகு, தனக்குள் எந்தவொரு ஆத்மாவினுடைய தீயதையும் தீயதாக தன்னுடைய புத்தியில் தாரணை செய்யமாட்டார்கள். எனவே, புரிந்துகொள்வது என்பது வேறு, புரிந்துகொண்ட வரை சரியே. ஆனால், தனக்குள் அல்லது தன்னுடைய உள்ளத்தில், தன்னுடைய புத்தியில், தன்னுடைய விருத்தியில், தன்னுடைய பேச்சில் பிறருடைய தீயதை தீயதாக தாரணை செய்யக்கூடாது, நிறைத்துக் கொள்ளக் கூடாது. எனவே, புரிந்துகொள்வது மற்றும் தாரணை செய்வது - இதில் வேறுபாடு உள்ளது.

தன்னை காப்பாற்றிக் கொள்வதற்காக - இதுவோ தவறு, தவறை தவறு என்று சொல்ல வேண்டும் அல்லவா என்று சொல்கின்றார்கள். ஆனால், புத்திசாலியின் வேலை என்ன? இது கெட்ட பொருள் என்று புத்திசாலி ஒருவேளை புரிந்திருக்கின்றார் என்றால் கெட்டது என்று புரிந்துகொண்ட பின்னரும் தன்னிடம் வைத்துக்கொள்வாரா என்ன? தன்னிடம் நல்ல முறையில் பாதுகாப்பாக வைத்துக்கொள்வாரா? விட்டுவிடுவார் அல்லவா. அல்லது சேமிப்பு செய்வது புத்திசாலித்தனமா? இது புத்திசாலித்தனமா? மேலும் சிந்தித்துப் பாருங்கள் - ஒருவேளை, தீய விசயம் அல்லது தீய நடத்தையை தனக்குள் தாரணை செய்துவிட்டீர்கள் எனில், உங்களுடைய புத்தி, விருத்தி, பேச்சு சதா சம்பூரணத் தூய்மையானது என்று ஏற்றுக்கொள்ள முடியுமா என்ன? ஒருவேளை, கொஞ்சம் ஏதாவது குறைபாடு அல்லது கறை உள்ளது, குப்பை உள்ளது எனில், குறைபாடு உள்ளவர்கள் ஒருபொழுதும் சம்பூரணமானவர்கள் என்று அழைக்கப்படமாட்டார்கள். அவர்கள் மகிழ்ச்சியான உள்ளமுடையவராக இருக்க முடியாது. ஒருவேளை, பிறருடைய தீயவை உள்ளத்தில் உள்ளது என்றால் அவர்களுடைய உள்ளம் சதா மகிழ்ச்சியான உள்ளமுடையதாக இருக்க முடியாது. உள்ளத்தில் தாரணை செய்துள்ள விசயங்கள், பேச்சில் அவசியம் வெளிப்படும். அது ஒருவருக்கு முன்னால் வர்ணனை செய்தாலும் சரி, அனேகருக்கு முன்னால் வர்ணித்தாலும் சரி. ஆனால், கர்மங்களினுடைய நிலையின் ஆழமான இரகசியத்தை சதா முன்னால் வைத்திடுங்கள். பிறருடைய தீயதை அல்லது தவறான விசயத்தை உள்ளத்தில் வைப்பதன் கூடவே வர்ணனை செய்கின்றீர்கள் என்றால் அந்த வீணான வர்ணனையானது - எப்படி ஒரு குவிந்த மாடத்தில் சப்தம் எழுப்பினால் தன்னுடைய அந்த சப்தமே இன்னும் பெரியதாக மாற்றமடைந்து தன்னிடமே திரும்பி வருகிறதோ, அது போன்றதாகும். குவிந்த மாடத்தில் சப்தம் எழுப்பிப் பார்த்திருக்கிறீர்களா? ஒருவேளை, ஒருவருக்கு தீயதை செய்வதற் கான, தவறை தவறாகப் பரப்புவதற்கான சமஸ்காரம் உள்ளது, இதை நீங்கள் பழக்கம் என்று

சொல்கின்றீர்கள், இன்று நீங்கள் ஒருவரை நிந்தனை செய்கின்றீர்கள், மேலும், தன்னை மிகவும் புத்திசாலியாகவும், தவறிலிருந்து தூரமானவர் என்றும் புரிந்துகொண்டு வர்ணனை செய் கின்றீர்கள், ஆனால், பக்கா நியமம் அதாவது கர்மங்களின் தத்துவம் என்னவென்றால் இன்று நீங்கள் ஒருவரை நிந்தனை செய்கின்றீர்கள் என்றால் நாளை இன்னொருவர் உங்களை இருமடங்கு நிந்தனை செய்வார். ஏனெனில், இந்தத் தவறான விசயங்கள், எவ்வாறு ஒரு விசேஷமான வியாதியின் கிருமிகள் மிகவும் வேகமாகப் பரவுகின்றனவோ மற்றும் பரவிய கிருமிகள் (தவறான விசயங்கள்) யாரை நிந்தனை செய்தீர்களோ, அவர்கள் வரை அவசியம் சென்றடையும். நீங்கள் ஒரு நிந்தனை செய்திருப்பீர்கள் மற்றும் அவர்கள் உங்களுடைய தவறை நிரூபிப்பதற்காக உங்களுடைய பத்து நிந்தனை செய்வார்கள் எனில், ரிசல்ட் என்ன ஆயிற்று? கர்மங்களின் நிலை என்னவாயிற்று? திரும்பி எங்கு வந்தது? ஒருவேளை, அந்த ஆத்மாவை சரியாக்குவதற்கான சுபபாவனை உங்களுக்கு உள்ளது என்றால் தவறான விசயத்தை சுபபாவனையோடு விசேஷமாக நிமித்தமான இடத்தில் சொல்லலாம், பரப்புவது தவறாகும். நான் எவருக்கும் சொல்லவில்லை, ஆனால், அவர்கள் சொல்லிக் கொண்டு இருந்தார்கள் நானும் ஆமாம், ஆமாம் என்றேன், ஆனால் வேறு ஒன்றும் சொல்லவில்லை என்று சிலர் சொல்கின்றார்கள். உங்களுடைய பக்திமார்க்கத்தின் சாஸ்திரத்தில் கூட தீய காரியம் செய்யவில்லை ஆனால், பார்த்தார்கள், துணையாகவும் இருந்தார்கள் என்றால் அதுவும் பாவம் என்ற வர்ணனை உள்ளது. ஆமாம், ஆமாம் என்று சொல்வது கூட கர்மங்களின் நிலையின் அனுசாரம் பாவங்களின் பங்குதாரர் ஆகுவதாகும்.

நிகழ்கால சமயம் கர்மங்களின் நிலையைப் பற்றிய ஞானத்தில் மிகவும் இலகுவாக ஆகிவிட்டீர்கள். ஆனால், இந்தச் சின்னச் சின்ன சூட்சும பாவங்கள் சிரேஷ்டமான சம்பூரண ஸ்திதியில் தடை ரூபம் ஆகின்றன. இலகுவாகி விட்டதன் அடையாளங்கள் என்ன? அவர்கள் எப்பொழுதும் - இதை பிறரும் செய்கின்றார்கள், இது தற்சமயம் நடக்கத்தான் செய்கின்றது என்று தான் யோசிப்பார்கள், புரிந்திருப்பார்கள். இல்லையெனில் தன்னைத் தானே இலகுவாக்கிக் கொள்வதற்காக, நான் விளையாட்டாகச் சொன்னேன், எனது நோக்கம் அப்படி இல்லை, வாயில் வந்ததை பேசிவிட்டேன் என்று சொல்வார்கள். இந்த விதியானது சம்பூரண வெற்றியை அடைவதில் சூட்சுமத் தடையாகிவிடுகிறது. ஆகையினால், ஞானம் அதிகமாகக் கிடைத்திருக்கிறது, படைப்பாளர் மற்றும் படைப்பைப் பற்றிய ஞானத்தைக் கேட்பது, வர்ணிப்பது மிகவும் தெளிவாகிவிட்டது. ஆனால், கர்மங்களின் ஆழமான நிலையைப் பற்றிய ஞானம் புத்தியில் சதா தெளிவாக இருப்பதில்லை, ஆகையினால், இலகுவாக ஆகிவிடுகின்றனர். சில குழந்தைகளுக்கு - தந்தை எவ்வாறு சொல்கின்றாரோ, தந்தை குழந்தைகளிடத்தில் சிரேஷ்ட ஆசைகள் என்ன வைக்கின்றாரோ, என்ன விரும்புகின்றாரோ, எவ்வளவு விரும்புகின்றாரோ, அவ்வளவு இல்லை என்று தன்னைப் பற்றியே புகார் உள்ளது. இதற்கான காரணம் என்ன? இந்த மிகவும் சூட்சுமமான வீணான கர்மம் புத்தியை, மனதை உயர்ந்த அனுபவம் செய்ய விடுவதில்லை. யோகம் செய்வதற்காக அமர்கின்றார்கள், ஆனால், அதிக நேரம் யுத்தத்தில் சென்றுவிடுகிறது, வீணானதை அழித்து சக்திசாலி ஆகுவதில் சமயம் சென்றுவிடுகிறது. ஆகையினால், என்ன செய்ய வேண்டும்? எவ்வளவு உயர்ந்தவர்களாக

ஆகின்றீர்கள்! உயர் நிலைக்கு செல்லும்போது கவனமும் உயர்ந்ததாக வைக்க வேண்டும்.

பிராமண வாழ்க்கையினுடைய ஆனந்தத்தை அனுபவம் செய்யவேண்டும். ஆனந்தத்தில் இருப்பது என்றால் என்ன வந்ததோ, அதை செய்துவிட்டேன், களிப்பில் இருந்தேன் என்பது கிடையாது. இது அல்பகால சுகத்தின் ஆனந்தமாகும் மற்றும் அல்பகால சம்பந்தம், தொடர்பின் ஆனந்தமானது சதா கால மகிழ்ச்சியான உள்ளத்திலிருந்து வேறுபட்டதாகும். அதை ஆனந்தம் என்று புரிந்து கொள்ள வேண்டாம். என்ன வந்ததோ அதை பேசிவிட்டேன், என்ன வந்ததோ அதை செய்துவிட்டேன், நானோ ஆனந்தத்தில் இருக்கிறேன் என்று அல்பகால, மனக் கேளிக்கையில் இருப்பவர்களாக ஆகாதீர்கள். சதா காலமும் ஆன்மிக போதையில் இருங்கள். இதுவே யதார்த்தமான பிராமண வாழ்க்கை ஆகும். ஆனந்தத்திலும் இருங்கள் மற்றும் கர்மங்களின் நிலையை அறிந்தவராகவும் இருங்கள். அப்பொழுதே என்ன விரும்புகின்றீர்களோ, எப்படி விரும்புகின்றீர்களோ, அப்படி அனுபவம் செய்துகொண்டே இருப்பீர்கள். புரிந்ததா? கர்மங்களின் ஆழமான நிலையை அறிந்தவர் ஆகுங்கள். பொக்கிஷங்களுடைய சேமிப்பின் முடிவை பின்னர் கூறுவோம். நல்லது.

நாலாபுறங்களிலும் உள்ள கவலையிலிருந்து விடுபட்ட கவலையற்ற சக்கரவர்த்தி ஆத்மாக்களுக்கு, சதா மகிழ்ச்சியான உள்ளம் கொண்ட விசேஷஆத்மாக்களுக்கு, சதா தனக்காக மற்றும் அனைத்து ஆத்மாக்களுக்காக சிரேஷ்ட பரிவர்த்தனை சக்தியை கர்மத்தில் கொண்டு வரக்கூடிய கர்மயோகி ஆத்மாக்களுக்கு சதா படைப்பாளர் மற்றும் படைப்பைப் பற்றி அறிந்திருப்பவர் மற்றும் கர்ம தத்துவத்தைப் பற்றியும் அறிந்திருப்பவர், இப்பேற்பட்ட ஞான சொரூப ஆத்மாக்களுக்கு பாப்தாதாவின் நினைவுகள், அன்பு மற்றும் நமஸ்காரம்.

தாதிகளுடனான சந்திப்பு

நிகழ்கால சமயத்தில் எந்த விசயத்தின் அவசியம் உள்ளது? கர்மங்களின் ஆழமான நிலையைப் பற்றிய ஞானம் மெர்ஜ் ஆகிவிட்டது, ஆகையினால், கவனக்குறைவு உள்ளது. முயற்சியாளராகவும் இருக்கின்றீர்கள், ஆனால், முயற்சியில் கவனக்குறைவு வந்துவிடுகிறது. ஆகையினால், இப்பொழுது இதனுடைய (கர்மங்களின் நிலையைப் பற்றிய ஞானம்) அவசியம் உள்ளது. பாப்தாதா அனைவருடைய ரிசல்ட்டைப் பார்க்கின்றார்கள். என்ன நடந்து கொண்டு இருக்கிறதோ அது நல்லதாகத் தான் நடக்கிறது. ஆனால், இப்பொழுது நல்லவரிலும் நல்லவராக ஆகியே தீரவேண்டும். பிஸியாக இருக்க வேண்டியுள்ளது அல்லவா. அதிக சமயம் எதில் பிஸியாக இருக்க வேண்டியுள்ளது? எந்த விசயத்திற்கு அதிக நேரம் கொடுக்க வேண்டியதாக உள்ளது? உங்களுக்கு உங்களுடைய ஸ்திதியானது தனிப்பட்டதாகவும், அன்பானதாகவும் உள்ளது, ஆனால், சமயம் கொடுக்க வேண்டியதாக உள்ளது. இதே சமயத்தை பவர்ஃபுல் சக்திசாலி லைட் ஹவுஸ் (கலங்கரை விளக்கம்), மைட் (சக்தி) ஹவுஸ் ஆகி அதிர்வலைகளைப் பரப்புவதில் செலவிட்டால் என்னவாகும்? குழுவாக இதே சூழ்நிலை இருக்க வேண்டும், வேறு எந்த விசயமுமே இல்லையெனில், அதிர்வலைகளானது விஷ்வம் அல்லது இயற்கை வரை சென்றடையுமா? இப்பொழுது அனைத்து மக்களும் - எப்பொழுது

எங்களுடைய படைப்பாளர் அல்லது மாஸ்டர் படைப்பாளர் சம்பன்னமாக அல்லது சம்பூரணமாக ஆகி எங்கள் மூலம் தங்கள் வரவேற்பைப் பெறுவார்கள் என்று காத்துக்கொண்டு இருக்கின்றார்கள். இயற்கையும் கூட வரவேற்கும் அல்லவா. அவை வெற்றி மாலையோடு வரவேற்கும், அந்த நாளும் வந்து தான் ஆகவேண்டும். எப்பொழுது வெற்றி முரசு கொட்டுமோ, அப்பொழுது பிரத்யட்சத்தின் முழக்கம் முழங்கும். முழங்கியே ஆகவேண்டும் அல்லவா.

தாதி சந்திரமணி அவர்கள் சேவைக்குச் செல்வதற்காக விடைபெறுகின்றார்கள்

ஆல்ரவுண்டு ஆகுவது தான் சிரேஷ்ட சேவை ஆகும். நல்லது. சுற்றிக் கொண்டே இருங்கள். சுற்றிக் கொண்டே இருக்கும் நடிப்பு குழந்தைகளுடையது தான். தந்தையோ அவ்யக்த ரூபத்தில் சுற்றி வரமுடியும். சாகார ரூபத்தில் (பிரம்மா பாபா) கூட சுற்றி வரும் நடிப்பு தந்தைக்கு இருந்ததில்லை, குழந்தைகளுடையதாகத் தான் இருந்தது. நல்லது.

அவ்யக்த பாப்தாதாவின் தனிப்பட்ட சந்திப்பு - வெற்றி மாலையில் வருவதற்காக தீவிர முயற்சியாளர் ஆகுங்கள்

நாங்கள் சதா தீவிர முயற்சியாளர் ஆத்மாக்கள் என்று அனுபவம் செய்கின்றீர்களா? எப்பொழுது பிராமணர்கள் ஆனீர்களோ, அப்பொழுதுதே முயற்சியாளர் ஆகிவிட்டீர்கள். தீவிர முயற்சி யாளர்களாக இருக்கின்றீர்களா அல்லது முயற்சியாளர்களாக மட்டும் இருக்கின்றீர்களா? கேட்பவர்கள் மற்றும் சொல்பவர்களை முயற்சியாளர் என்று சொல்லலாமா அல்லது தீவிர முயற்சியாளர் என்று சொல்லலாமா? கேட்பது மற்றும் சொல்வது, இதற்குப் பிறகு என்ன ஆகிறது? தீவிர முயற்சியாளர் என்று யாரைச் சொல்லலாம் - கேட்பவர்களையா அல்லது ஆகுபவர்களையா? யார் மாலையின் 16108வது எண்ணில் உள்ளவரோ, அவரும் கூட கேட்கவும் செய்கின்றார் மற்றும் சொல்லவும் செய்கின்றார். இல்லையெனில் மாலையில் எவ்வாறு வருவார்? ஆனால், 108 மணி மாலையில் யார் வருவார்கள்? 108 மணி மாலையின் பெயர் வெற்றி மாலை என்பதாகும். 16000 மணி மாலையின் பெயர் வெற்றி மாலை என்பது கிடையாது. எனவே, கேட்பது மற்றும் சொல்வது, இதை பெரும்பான்மையினர் செய்கின்றனர். ஆனால், கேட்டார்கள் மற்றும் ஆகிவிட்டார்கள், இப்பேற்பட்டவர்களையே தீவிர முயற்சி யாளர்கள் என்று சொல்லப்படுகிறது. தீவிர முயற்சியாளர்கள் 108 ஆவார்கள் மற்றும் முயற்சியாளர்கள் 16108 ஆவார்கள். எனவே, நான் தீவிர முயற்சியாளரா அல்லது முயற்சியாளரா என்று தன்னைத் தானே சோதனை செய்யுங்கள். நான் யாராக இருக்கின்றேன், எப்படி இருக்கின்றேன் என்று பெரும்பான்மையினர் தன்னைத் தானே அறிந்து கொள்ள முடியும். சிலர் தன்னை அறியாதவர்களாகவும், தவறை சரி என்று புரிந்து நடப்பவர்களாகவும் இருக்கின்றார்கள். பெரும்பான்மையினர் தன்னுடைய மனதில் நான் யார்? என்று தன்னைத் தானே உண்மையாக அறிந்திருக்கின்றார்கள். ஆகையினால், சதா தன்னைப் பாருங்கள், பிறரை அல்ல.

தன்னுடைய முயற்சியை சோதனை செய்யுங்கள் மற்றும் தீவிர முயற்சியாக மாற்றம் செய்யுங்கள். இல்லையெனில், இறுதி நேரம் வரும்பொழுது மாற்ற முடியாது. அந்த சமயம் கற்பதற்கான சமயம் முடிவடைந்துவிடுகிறது,

தேர்வுக்கான சமயத்தில் கற்பதற்கான வாய்ப்பு கிடைப்பதில்லை. ஒருவேளை, மாணவர் ஒருவர் - ஒரு கேள்விக்கு பதில் தெரியவில்லை, புத்தகத்தைப் பார்த்து படித்துவிட்டு பதில் கொடுக்கின்றேன் என்று நினைத்தால், அது சரியானதா அல்லது தவறானதா? அந்த சமயத்தில் தன்னை மாற்ற முடியாது. யாராக இருக்கின்றாரோ, எப்படி இருக்கின்றாரோ அதற்கேற்ற பலனையே அடைவார். ஆனால், இப்பொழுது வாய்ப்பு உள்ளது. இப்பொழுது மிகவும் தாமதமாகிவிட்டது (டூ லேட்) என்ற போர்டு மாட்டப்படவில்லை, தாமதமாகிவிட்டது என்ற போர்டு மாட்டப்பட்டுவிட்டது. தாமதமாகி விட்டது, ஆனால், மிகவும் தாமதமாகவில்லை. ஆகையினால், இன்னும் வாய்ப்பு உள்ளது. சில மாணவர்கள் ஆறு மாதங்களில் கூட மதிப்புடன் தேர்ச்சி பெறலாம், ஒருவேளை சரியான முயற்சி செய்கின்றார்கள் என்றால்! ஆனால், சமயம் முடிவடைந்த பிறகு எதுவும் செய்ய முடியாது. தந்தை கருணை காட்ட விரும்பினாலும் கூட கருணை காட்ட முடியாது. பரவாயில்லை, இவர் நல்லவர், இவருக்கு மதிப்பெண் கொடுத்துவிடலாம், இப்படி தந்தை செய்ய முடியுமா? ஆகையினால், இப்பொழுதிலிருந்தே சோதனை செய்யுங்கள் மற்றும் மாற்றம் செய்யுங்கள்.

கவனக்குறைவை விட்டுவிடுங்கள். சரியாக இருக்கின்றேன், சென்றுகொண்டு இருக்கின்றேன், சென்றடைந்து விடுவேன், இதுவே கவனக்குறைவு ஆகும். கவனக்குறைவு உள்ளவர்களுக்கு இந்த சமயம் ஆனந்தமாக இருக்கும். யார் கவனக்குறைவுடன் இருக்கின்றார்களோ, அவர்களுக்கு எந்தக் கவலையும் இருக்காது, அவர்கள் ஓய்வையே அனைத்துமாக நினைப்பார்கள். எனவே, கவனக்குறைவு இருக்கக்கூடாது. சதா எச்சரிக்கையுடன் (அலர்ட்) இருக்க வேண்டும். நீங்கள் பாண்டவ சேனை அல்லவா! சேனை கவனக்குறைவுடன் இருக்குமா அல்லது எச்சரிக்கையுடன் இருக்குமா? சேனை என்றால் அலர்ட்டாக, விழிப்புடன், எச்சரிக்கை யுடன் இருப்பவர்கள். கவனக்குறைவுடன் இருப்பவர்களை சேனையினுடைய போர்வீரன் என்று சொல்ல முடியாது. எனவே, கவனக்குறைவு கூடாது, அட்டென்ஷன்! ஆனால், அட்டென்ஷன் (கவனம்) கூட இயற்கையான விதி ஆகிவிடவேண்டும். சிலர் அட்டென்ஷனுடைய டென்ஷன் கொண்டிருப்பார்கள். டென்ஷனான வாழ்க்கை சதா வாழ முடியாது. டென்ஷனான வாழ்க்கை கொஞ்ச சமயமே இருக்கும், இயல்பாக இருக்காது. எனவே, அட்டென்ஷன் கொண்டிருக்க வேண்டும், ஆனால், இயல்பான அட்டென்ஷன் பழக்கம் ஆகிவிட வேண்டும். எவ்வாறு மறதியின் பழக்கம் இருந்தது அல்லவா. விரும்பாமலேயே மறந்து போகிறது. எனவே, இந்த பழக்கம் உருவாகிவிட்டது அல்லவா, இயல்பாகிவிட்டது அல்லவா. அதுபோன்று நினைவு சொரூபத்தில் இருப்பது பழக்கம் ஆகிவிடவேண்டும், அட்டென்ஷன் கொடுப்பது பழக்கம் ஆகிவிடவேண்டும். ஆகையினால், பழக்கத்தினால் மனித ஆத்மா நிர்பந்தமாகிவிடுகிறது என்று சொல்லப் படுகிறது. விரும்பாமலேயே கூட நடந்துவிடுவதையே நிர்பந்தம் என்று சொல்கின்றோம். எனவே, அத்தகைய தீவிர முயற்சியாளர் ஆகியிருக்கிறீர்களா? தீவிர முயற்சியாளர் என்றால் வெற்றியாளர். அப்பொழுதே மாலையில் வரமுடியும்.

நீண்டகாலப் பயிற்சி வேண்டும். எப்பொழுதும் அலர்ட் என்றால் சதா எவரெடி (எப்பொழுதும் தயார் நிலையில் இருப்பது). உங்களுக்கு என்ன நம்பிக்கை

உள்ளது - வினாச சமயம் வரை இருப்பீர்களா அல்லது முன்னதாகவே செல்ல முடியுமா? முன்னதாகவே செல்ல முடியும் அல்லவா, ஆகையினால், எவரெடி. வினாசம் உங்களுக்காக காத்திருக்கட்டும், நீங்கள் வினாசத்திற்காக காத்திருக்காதீர்கள். அது படைப்பு ஆகும், நீங்கள் படைப்பாளர் ஆவீர்கள். சதா எவரெடி. என்ன புரிந்துகொண்டீர்கள்? கவனம் வைக்க வேண்டும். என்ன குறையை உணர்கின்றீர்களோ, அதை மிகவும் சீக்கிரத்திலும் சீக்கிரமாக முடிவடையச் செய்யுங்கள். சம்பன்னம் ஆகுவது என்றால் பலவீனத்தை முடிவடையச் செய்வதாகும். இங்கு வரும்பொழுது இங்குள்ளவர்களாகவும், அங்கு சென்றதும் அங்குள்ளவர்களாகவும் ஆகிவிடுவது கூடாது. அனைவரும் தீவிர முயற்சியாளராகிச் செல்ல வேண்டும். நல்லது.

வரதானம் : உலகத்திலிருந்து இருளை அழித்து ஒளியைக் கொடுக்கக்கூடிய மாஸ்டர் ஞான சூரியன் ஆகுக.

உலகத்தின் இருளை அழித்து ஒளி கொடுக்கக் கூடியவர்கள் தான் மாஸ்டர் ஞான சூரியன் ஆவார்கள். அவர்கள் சுயம் தானும் பிரகாச சொரூபமாக, ஒளி மற்றும் சக்தி (லைட்-மைட்) ரூபமாக இருப்பார்கள் மற்றும் பிறருக்கும் ஒளி, சக்தியைக் கொடுப்பவர்களாக இருப்பார்கள். எங்கு சதா ஒளி இருக்கிறதோ, அங்கு இருளுக்கான கேள்வியே இருக்காது, இருள் இருக்கவே முடியாது. யார் உலகத்திற்கு ஒளியைக் கொடுப்பவர்களோ, அவர்கள் சுயம் இருளில் இருக்கமுடியாது. சம்பூரணத் தூய்மை என்றால் ஒளி என்று அர்த்தம். அவர்களிடம் இருள் அதாவது விகாரங்களின் அம்சம் கூட இருக்கமுடியாது.

சுலோகன்: சுபாவம், சமஸ்காரம், சம்பந்தம் தொடர்பில் இலகுவாக இருப்பதுவே இனிய பண்புள்ளவர் (அனைவருடனும் கலந்திருப்பவர்) ஆகுவதாகும்.